DUPLICATE
பதிவுப் பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

விரோதிஞு (1889) ஆவணிமீ ௨௨ ஆரம்பமானது.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. 9-40 |
| சோவியாப்பகுதி: ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | காற்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேல் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரிஞு ஆவணிமீ ௨௧ (௧௯௨௩ செப்டெம்பர் ௬) வியாழக்கிழமை { இலக்கம்—௧௯.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிதூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## ஸ்ராண்டேர்ட்
## கொளுக்கியோடுகள்.
## (Standard Tiles.)

இவை வேரோக் என்னுமிடத்திலுள்ள ஸ்ராண்டேர்ட் ஓட்டுக் கம்பனியாராற் செய்யப்படுவன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டுள் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்கத்தக்கனவாயும் எவ்விஷயத்திலும், ஏனையஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன. மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம். (H. 18.)

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை
ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

## ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.
## புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.
ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4-0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

### ரசமணி.

சகல வசியம், தனவிரபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி முதலிய மேலும் பெருகும். தொத்து நோய், அவமிருத்து தோஷம், பேசவியாதிகள் அணுகாது. உபயோகிக்குமுறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினாங்கு, சிங்கப்பூர், கொட்டாஞ், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
(Q. 40) பழனி. S. I.

M. S. MAIDEEN ABDULKADER MARICAR,
& Doctor, T. N. SAMIPILLAI & Co.
MUHIADEEN MEDICAL HALL,
PORTO-NOVO, S. A. Dt.

எனது அன்பர்களே. எனது அன்பர்களே.

சற்று கவனியுங்கள். சற்று கவனியுங்கள்.

இனாம்! இனாம்!!

இந்த லேகியம்போல் பிற வைத்தியர்கள் செய்து கொடுக்கும் பக்ஷத்தில் ரூபா 1000 இனாம் கொடுக்கப்படும்.

## சிட்டுக்குருவி வீரதத்துவ லேகியம்.

எனது அன்பர்களே, சிட்டுக்குருவி லேகியமென்று சிலர் செய்து விற்கிறார்கள். அதாவது நரம்புகளுக்குத்தான் கொஞ்சம் வலுவைக்கொடுக்கும். இந்த லேகியம் அப்படியல்ல; எல்லா வியாதிகளையும் கண்டிக்கும்; இந்த வீர தத்துவ லேகியத்திலுடைய மகத்துவம் புசித்தவர்களறிவார்கள். இந்த லேகியமானது செய்யும் முறையும் பாகமும் தற்காலம் ஒருவரும் செய்தும் அறிந்துமிரார்கள். அதாவது சித்தர்கள் பெரியோர்கள் பெரிய பெரிய நாதாக்களுடைய செய்யும் முறை சுல்த்தான்கள் ராஜாக்கள் செய்து சாப்பிடும் வீர தத்துவம் தங்கிய லேகியம். தங்கம் குங்குமப்பூ கஸ்தூரி அம்பர் பவளம் முதலிய சேவசக்துக்களைக்கொண்டு சேகரிக்கப்பட்டது. இந்த லேகியமானது 1008 நரம்புகளுடைய வியாதிகளையும் சுத்தப்படுத்தி மேகவெட்டை மேகச்சூடு மேககாங்கை முதலியவற்றை நீக்கும். எங்கள் கம்பெனி மருந்தை ஒருமுறை தருவித்துச் சாப்பிடும் பக்ஷத்தில் தங்கள் ஆயுள் பரியந்தம் கைவிடமாட்டீர்களென்பது நிச்சயம்.

40 நாள் ஒரு மண்டலம் டப்பி 1க்கு ரூ. 10—0—0
20 நாள் அரைமண்டலம் டப்பி 1க்கு ரூ. 6—0—0
V. P. சார்ஜ் பிரத்தியேகம் 0—0—0

லேகியம் சாப்பிடும் முறை லேகியத்துடன் அனுப்பப்படும்.

N. B. வியாதியுள்ளவர்கள் டாக்டர் நேரில் பார்க்கவும். எங்கள் கம்பெனியில் எல்லா விதமான லேகியங்களும் மாத்திரைகளும் தைலங்களும் திராவகங்களும் பஸ்பங்களும் சகாய விலைக்குக் கொடுக்கப்படும்.

சிங்கப்பூர் பினாங் மலாய் ஸ்டேட்களுக்கு மருந்துக்கிரயமும் தபால் செலவுக்காக ரூ. 2ம் முன்னதாக மணிஆடர் அல்லது ரிஜிஸ்டர் மூலமாக அனுப்புவேண்டியது. அப்படி அனுப்பாவிட்டால் அனுப்பப்படமாட்டா.

எங்களுடைய கம்பெனிக்கு கமிஷன் ஏஜண்டு தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
விபரம் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

(தந்தி விலாசம்—முகையதீன்).

மானேஜர்: எம். எஸ். மெய்தீன் அப்துல்காதிர் மரைக்காயன்,
& டாக்டர் டி. என். சாமிப்பிள்ளை & கோ.,
முகையத்தீன் மெடிக்கல் ஹால்,
பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

எங்கள் சோல் ஏஜண்டு:
P. செல்லையா செட்டியார்,
கொத்தமல்லி ரோட்டு,
நாவல்பட்டி போஸ்ட், சிலோன்.
(Y. 20)

[ESTABLISHED 1909].

MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (*SouthArcotDistrict*).

வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனாமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவதனையு மடைவிக்கச் செய்யவில்லையென்றாவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றாவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்பஸ் கொடுத்துவிடப்படும்.

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஓர் புருஷசஞ்சீவியாகின்றது. மற்ற விபரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது

வாத பித்த சிலேத்ம பிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகால் கசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்செலவு இனாம். பினாங்கு, சிங்கப்பூர், கொளாம்பு, கோலாலம்பூர், போன முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜூ ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். சைபூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் சிருதம் அதாவது கெடுகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றாவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றாவது கடவுளுக்குப் பொதுவாய் ருபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனாமாயும் கொடுக்கப்படும். அப்படி ருபித்தும் இனாமேனும் பணத்தை கொடாவிட்டால் கோர்ட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றாவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டுகிறவனாவது முன் கண்ட இனாம் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
(Y. 19) பறங்கிப்பேட்டை தென்னாற்காடு ஜில்லா.

Telegrams: "APPANNA', BANGALORE CITY'

## கெ. தி. அப்பண்ணா & கம்பெனி,
பெங்களூர் நகர், (இந்தியா).

### பிரசித்திபெற்ற மைசூர் ஊதுவத்திகள்.

ரூ. அ. பை.
பன்னீர்வத்திகள் சேர் 1க்கு விலை 0-12-0 முதல் ரூபா 2-0-0 வரை.
புனுகுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0 முதல் ரூபா 4-0-0 வரை.
மத்தாப்புவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0 முதல் ரூபா 3-0-0 வரை.
ஜவ்வாதுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 5-0-0 முதல் ரூபா 7-0-0 வரை.
கஸ்தூரிவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 5-0-0 முதல் ரூபா 12-0-0 வரை.
அம்பர்வத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0 முதல் ரூபா 20-0-0 வரை.
வாசனைவில்லைகள் வில்லை 1க்கு விலை ரூ. 0-4-0 முதல் ரூபா 5-0-0 வரை.
புனுகு தோலா 1க்கு விலை ரூபா 10-0-0 முதல் ரூபா 12-0-0 வரை.
தசாங்கம் சேர் 1க்கு விலை ரூபா 2-0-0 முதல் ரூபா 3-0-0 வரை.

### கூந்தல் வளருந் தைலம்.

டில் மோஹினி ஹேர்ஆயில்புட்டி 1க்கு 0-12-0. டஸன் 1க்கு 8-0-0.
ஜாஸ்மின் ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.
பளவர் பஹார் ஹேர் ஆயில் புட்டி1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.
கமலா ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.

### ஓட்டோ வாஸனை ஸெண்டுகள்.

ஒரு கிராம் கொண்ட சிறியபாட்டல்கள் டஜன் 1க்கு விலை ரூபா 6-0-0

### சந்தன சோப்புகள்.

டஜன் 1க்கு ... ... ரூபா 6-0-0

### சந்தன மரத்தூள்.

பவுண்டு 1க்கு ... ... விலை ரூபா 1-8-0

தங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

Address:—
K. T. APPANNAH & Co,
Bangalore City.
(Y. 16) (INDIA).

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

## புஷ்டிக்கு கைகண்ட
## ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில், இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரூ. 10. 50 பில்ஸ் ரூ. 4-0-0
20 பில்ஸ் ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரூ. 2.

### பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரூ 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரூ. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q. 41) வைத்தியசாலை, பழனி, S. I.

நமது பத்திரிகை.

நல்லூர்க் கந்தசுவாமிகோயில் இரதோற்சவத்தின்பொருட்டு நமது யந்திரசாலையிலுள்ளோருக்கு வருகிற ஞாயிற்றுக்கிழமை விடுதலையானபடியால் நமது பத்திரிகை வருகிற திங்கட்கிழமை வெளிவராது. இந்தச் செப்டெம்பர்மீ 13உ வியாழக்கிழமை வெளிவருமென்பதைப் பத்திரிகாபிமானிகளுக்குத் தெரிவிக்கின்றோம்.


# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோற்காரிஞு ஆவணிமீ 21உ வியாழக்கிழமை.


## இத்தாலிய - கிரேக்க யுத்தம்.

எந்தக் காரணத்தினால் உலகத்தில் இப்பொழுது பஞ்சமும் வியாபாரக் குறைவும் கைத்தொழின் முயற்சிக் குறைவும் ஏற்பட்டனவோ எந்தக் காரணத்தினால் ஐரோப்பாக்கண்டமும் அதனோடு சம்பந்தப்பட்ட மற்றும் நாடுகளும் நிலைதிரிந்தனவோ எந்தக் காரணத்தினால் ஐரோப்பிய தத்துவராச்சியங்கள் தங்களிடம் பொருள் ஏவல் என்னும் மூன்றுங் குன்றப்பெற்று இடர்ப்படுகின்றனவோ இக்குறைவுகள் ஒருவாறு நிறைவடைவதன்முன் அந்தக் காரணம் மீட்டும் நிகழ ஆரம்பித்துவிட்டது. உலகத்திலே கஷ்டமான ஒருமாறுதல் உண்டுபட்டமைக்குக் காரணம் சில வருடங்கட்கு முன்னர் நிகழ்ந்த பாரிய ஜர்மனிய யுத்தமேயாம். இந்த யுத்தம் முடிந்தபின்னரும் ஐரோப்பாக்கண்டத்தில் துருக்கிய கிரேக்க யுத்தம் அயர்லாந்துக் கலகம் என்னுமிவை போன்ற அமைதியீனங்கள் நிகழ்ந்துகொண்டே வந்தன. ஆனால் இச்சமையம் ஒரு பெரிய யுத்தம் ஆரம்பித்திருக்கின்றது. அது யாதெனில் இத்தாலிய-கிரேக்க யுத்தமேயாம். இந்த யுத்தத்தை யிட்டு மேலைத்தேசத்தின் சகலராச்சியத்தாருக்கும் திகில் உண்டாகின்றது. இப்படி ஒரு யுத்தம ஆரம்பிக்குமெனச் சில வாரங்கட்கு முன்னர்த்தானும் எவரேனுங் காத்திருக்கவில்லை. யுத்தம் ஆரம்பித்தற்கான காரணமும் மிக நூதனமானதாகும்.

சிலநாட்களுக்குமுன் இத்தாலிய சேனாபதியாகிய தில்லனி யென்பவர் வேறு இரு ராணுவ உத்தியோகத்தருடனும் ஒரு துவிபாஷிகருடனுங் கூடிக்கொண்டு மோட்டர்ரத மார்க்கமாக "அல்பனி" நாட்டிற்குப் போகும்போது, கிரேக்கருக்குரிய "ஜமீன்" என்னுமிடத்தில் தெருவிற் குறுக்கே இடப்பட்ட மரக் குற்றிகளினால் இவர்கள் ஏறிச்சென்ற ரதத்தின் போக்குத் தடுக்கப்பட்டது. மரக்குற்றிகளைக் கண்டவுடனே ரதம் அப்பாற் செல்லாது நிற்க, அந்த இடத்திலே மறைந்து ஆயுதபாணிகளாக நின்ற சிலர் உடனே வெளிப்பட்டு இந்த ரதத்திலிருந்த எல்லோரையும் கொன்றுவிட்டார்கள். சாரதியைத்தானும் உயிர்தப்ப விடவில்லை. இந்தக் குரூரமான செய்தியைக் கேள்விப்பட்டவுடனே இத்தாலியருக்கு அடங்காச் சினம் ஏற்பட இத்தாலிய அதிகாரிகள் கிரேக்கர் இக்குற்றத்தின் பொருட்டு மன்னிப்புக் கேட்டலவேண்டுமென்றும் ஐந்து கோடி "லயர்" என்னும் நாணகம் நஷ்ட மிறுக்கவேண்டுமென்றுங் கேட்டனர். பொறுதி கேட்கும்படி விதிக்கப்பட்ட நிபந்தனைகள் ஏழு. இவற்றுள் மூன்று நிபந்தனைகள் கிரேக்கருடைய கௌரவத்திற்குப் பங்கம் விளைக்கு மியல்பினவாயிருந்தமையினால் கிரேக்கர் நஷ்டஈடு கொடுத்தற்கும் மூன்றை யொழிந்த ஏனைய நான்கு நிபந்தனைகளுக்கும் உடன்பட்டனர். இந்த மூன்று நிபந்தனைகளும் நியாயமானவைதாமாவென்பதை யோசிக்கும்பொருட்டு, இப்பொழுது 'ஜெனிவா' என்னுமிடத்திற் கூடியிருக்கும் சர்வசாதிசங்கக் கூட்டத்தாருக்கு (Council of the league of nations) விண்ணப்பஞ் செய்தனர். இக்கூட்டத்தாரின் முடிவு வருதற்குமுன், இத்தாலியர் கிரேக்கர் சொன்ன சமாதானத்திலே திருப்தியடையாது, கிரேக்கருக்குரிய "கொர்வியூ" என்னுந் தீவை உடனே பிடித்துக்கொண்டனர். தாம் விதித்த நிபந்தனைகளைக் கிரேக்கர் நிறைவேற்றும்வரைக்கும் இத்தாலியர் இத்தீவை ஒரு பொறுப்பாக (ஈடாக)ப் பிடித்துக்கொண்டதாகவே தெரிவிக்கின்றார்கள். ஆனால் இத்தீவின்மீது குண்டுப்பிரயோகஞ் செய்து பொருள்களைக் கவர்ந்து அழித்துப் பலரைக் கொன்று இன்னும் பல அடாத கருமங்களை இத்தாலியர் செய்திருக்கின்றனர். உண்மையாக ஈடாக இத்தீவை இவர்கள் பிடித்து வைத்திருப்பதானால் இப்படிப்பட்ட செயல்களைச் செய்வார்களோவென்பது சந்தேகம்.

இவைமாத்திரமன்றி இத்தாலிய ச[illegible]றயின் கப்பலொன்று ஒரு கிரேக்க கப்பல்மீது குண்டுப் பிரயோகஞ் செய்து சேதம் விளைத்துவிட்டது. இவைகளையெல்லா முற்றுநோக்கு மிடத்து, இத்தாலியர் கிரேக்கரைச் சண்டைக்கு இழுக்கின்றனரென்றே சொல்லவேண்டியிருக்கின்றது. இத்தாலியர் இந்த விஷயத்திற்கும் சர்வசாதிசங்கத்திற்கும் யாதுந் தொடர்பில்லையென்று கூறுகின்றனர். ஆங்கிலரும் மற்றும் அரசாங்கத்தினரும் இன்னுந் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டிலர். இத்தாலியர் மிக்க ஆத்திரத்தோடு யுத்தசன்னத்தராய் நிற்கின்றனர். இந்த விஷயமாக யாதொன்றும் சர்வசாதிசங்கத்திற்பேசவேண்டாமென்று இத்தாலியர் சங்கத்திலிருக்குந் தங்கள் பிரதிநிதிக்குத் தெரிவித்திருக்கின்றனர். கிரேக்கர்குறித்த சேனாபதியையும் மற்றும் மூவரையும் கொன்றதற்குக் காரணம் என்னவென்பது இன்னமும் புலப்படவில்லை. பட்டகாலே படும் கெட்ட குடியே கெடும் என்ற பிரகாரம் துருக்கியரால் நைபப் புடையுண்டிருக்கும் கிரேக்கருக்கு இப்பொழுது பெருஞ் சங்கடம் வந்திருப்பது நன்மைக்கன்று. இந்த யுத்தம் ஆரம்பத்திலேயே அவிந்து போகாது நடைபெறுமானால், ஐரோப்பாக் கண்டத்திற்கு அனர்த்தமென்றே காத்திருக்கவேண்டும்.

## தேர்த் திருவிழா.

சிவபெருமானவர் ஆன்மாக்களாகிய எங்களைத் தம்முடைய சச்சிதானந்த நிலையிற் சாரப்பண்ணுதற்காகச் செய்தருளுந் தொழில்கள் ஐந்து.

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ் சத்தி
பின்னமிலா னெங்கள்பிரான் -திருவருட்பயன்.

அவையாவன: படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல். படைத்தலாவது ஆன்மாக்களுக்குச் சரீரத்தைக் கொடுத்தல். காத்தல் சரீரங்களை நிலைபெறச் செய்தல். அநுபவம் முடிந்தவுடனே உடம்பை நீக்குதல் அழித்தல். மலங்களின் வீரத்தைத் தடுத்தல், அஃதாவது ஆன்மாக்களை நல்வழிப்படுத்துதல் மறைத்தலெனப்படும். சிவாநந்தப் பெருவாழ்வைக் கொடுத்த லருளலெனப்படும்.

இவ்வைந்து தொழில்களின் முறைகளும் திருவிழாக்களாற் குறிக்கப்படும். உற்சவ மென்பதற்கு மேலான ஐந்து தொழில் என்பது கருத்து. திருவிழாக்களுக்குள்ளே தேர்த்திருவிழா பாசத்தை அழிக்குங் காலத்தையும் முறையையும் குறித்தலாலும், தீர்த்தம் சிவாநந்தத்தைக் கொடுத்தலைக் குறித்தலாலும், இந்த இரண்டு திருவிழாக்களும் எல்லாவற்றிலும் சிறந்தவை.

கடவுள் தேரில் உலாவுவது யசுர்வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அசுரர்களுக்கு மூன்று நகரங்களிருந்தன. தேவர்கள் அவைகளை அழித்துக்கொள்ள மாட்டாமலிருந்தார்கள். ஆதலால் தேவாதிதேவராகிய சிவபெருமான் பூமியைத் தேராகவும், சூரிய சந்திரரைச் சில்லாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமாவைச் சாரதியாகவும், விஷ்ணுவை அம்பாகவும் கொண்டு, அந்த மூன்று நகரங்களையும் அழித்தருளினாராம். அசுரருடைய மூன்று நகரங்களும், மூன்று மலங்களின் தடைகளேயன்றி வேறல்லவென்று திருமூல நாயனார் பாடியருளினார். ஆதலால் கடவுள் தேரில் ஏறுவது எங்களுடைய பாசங்களை அழித்து எங்களுடைய துன்பங்க ளெல்லால் நீக்கும் பொருட்டேயென்பது நாங்கள் விளங்கத்தக்கது.

தேர்த்திருவிழா இவ்வளவு சிறந்ததாயிருத்தலாற் பெருந் தொகையான சனங்கள் இந்த நாளிலே கோயிலுக்குவருகிறார்கள். சுவாமி தரிசனஞ் செய்யும்போது மிகுந்த களிவோடும், ஆசையோடும், பயபக்தியோடும் வணங்கவேண்டும். பசியால் தவித்த குழந்தை தாயைக்கண்டு பெரும் ஆநந்தத்தோடும், மறைந்துநின்ற கன்றைக் கண்ட பசுவின் உருக்கத்தோடும், கடும் வெயிலிலே கடுமணலில் நடந்துவந்தோன் நிழலையடையும்போதுள்ள ஆறுதலோடும், சாகக்கிடந்தபோது காத்துவைத்த வைத்தியனுக்குக் காட்டும் நன்றியுணர்வோடும், மகாராசாவுக்கு முன்னே நிற்கும் ஏழைக் குடியானவனுக்குள்ள பயபக்தியோடும் கடவுளுடைய திவ்விய சந்நிதானத்தில் நின்று மெய்யன்போடு வழிபடல்வேண்டும். கடவுளைப் போற்றித் துதிப்பதிலும் பார்க்கக் கோயிலிலே திருத்தொண்டு செய்தல் மிக மேலான பாக்கியம். கடவுளுக்குத் திருத்தொண்டு செய்யத்தக்க பெருவாழ்வு எங்களுக்குக் கிடைக்குமானால் நாங்கள் பெரிய அதிஷ்டசாலிகளாயிருக்கவேண்டும். ஆதலால் கூட்டுதல், மெழுகுதல், விளக்குப் பிடித்தல், காவுதல் தேரிழுத்தல் முதலிய திருத்தொண்டுகளில் ஒன்றேனும் பலவேனும் செய்தற்குப் பேராசை இருத்தல்வேண்டும்.

புண்ணிய தினமாகிய தேர்த் திருவிழாவிலே சுவாமியைத் தரிசித்துக் காதலோடு வணங்கித் திருத்தொண்டு செய்பவர்கள் கிடைத்தற் கரியனவாகிய மனிதப்பிறவியையும் சைவசமயத்தையும் பெற்ற பெரும் பேற்றின் பலனையே ஈசனின் பேரருளைப் பெற்று இனிது வாழ்ந்து மேல் நிலையை அடைவார்கள்.

## நல்லைக் கந்தசுவாமி கோவில் மகோற்சவம்.

கலியுகந்தன்னிலே கண்கண்ட தெய்வமாகிய சுப்பிரமணியப்பெருமான் கோயில் கொண்டருளிய புராதன ஆலயமாகிய நல்லைக் கந்தசுவாமி கோவிலில் இவ்வருடம் மகோற்சவம் மிக விசேடமாக நடைபெற்றுவருகின்றது. பத்தாந் திருவிழா கார்த்திகைத் திருவிழா முதலிய விசேஷ உற்சவ தினங்களில் தெய்வநாயகி வள்ளிநாயகி சமேதராய் முத்துக்குமார சுவாமி எழுந்தருளி வீதிவலம் வருங்காட்சி அடியாருள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மாட்சியுடையதாகும். உற்சவங்கள் தாசியர் நடனமின்றியும் வாணவேடிக்கையின்றியும் காலந்தவறாமல் நடைபெறுவதனால் விரதகாரரும் மற்றுமடியார்களும் உற்சவ தரிசனஞ் செய்த பின்னரே போசனமருந்தும் பாக்கியத்தைப் பெற்றிருக்கின்றார்கள். இதுகாறும் தீர்த்தோற்சவ காலங்களில் கோயில் நந்தனவனத்துள்ள கூபத்திலேயே தீர்த்தங் கொடுக்கப்பட்டுவந்தமையினால் அடியார்கள் பலர் அக்காலங்களில் தீர்த்தோற்சவ தரிசனஞ் செய்வதும் தீர்த்தமாடுவதுங் கஷ்டமாக இருந்தன. இதனையுணர்ந்து மேற்படி ஆலயத் தருமகர்த்தாவாகிய ஸ்ரீ இரகுநாத மாப்பாணரவர்கள் ஆறுமுகசுவாமி சந்நிதிக் கெதிரே பெருந் தொகைத் திரவியஞ் செலவு செய்து அதிவிரைவாகத் திருக்குளமொன்றை அமைப்பித்துள்ளனர். இத்திருக்குளத்திலேயே இனிமேற் தீர்த்தோற்சவம் நடக்குமென அறிகின்றோம். திருக்குளத்தின் பக்கத்திலும் ஆறுமுகசுவாமி சந்நிதானத்திலும் இடப்பட்ட பந்தர்கள் அடியார்களுக்குப் பகற்காலத்தில் நிழலாகவும் இராக்காலத்திலே தங்குமிடங்களாகவும் திருவீதிக்கு அழகாகவும் விளங்குகின்றன. இப்பொழுதிருக்கும் தருமகர்த்தா அவர்கள் அற்பகாலத்துள் ஆலயத்திலே செய்துவரும் திருத்தங்கள் பல. இன்னும் ஆவசியகம் வேண்டிய திருப்பணிகளைச் செய்து முற்றுவிக்க நமது தருமகர்த்தாவுக்குத் திடகாத்திரத்தையும் குன்றாத ஊக்கத்தையும் சுப்பிரமணியப் பெருமான் பாலிப்பாராக. நிற்க சுவாமி தரிசனஞ்செய்யும்வண்ணஞ் செல்லும் அடியார்கள் சிந்திக்கவேண்டிய விஷயமொன்றுண்டு. ஆலயத்தின் வெளிப்பிரகாரத்திலே சிலர் தாம்பூலமருந்தி உமிழ்ந்து அசுசிப்படுத்திவிடுகின்றார்கள். பன்னூற்றுக் கணக்கான அடியார்கள் தினந்தோறும் அங்கப்பிரதக்கணஞ் செய்யும் திருவீதியை இப்படி அசுசிப்படுத்துவது மகா பாதகமென்பதை இவர்கள் சிந்தித்து இனிமேலாயினும் இவ்விதமான அநாசாரம் நடவாதபடி சாவதானமாகவிருப்பார்களாக.

## ஜப்பான் தேசத்திற்கு நேர்ந்த விபத்து.

ஜப்பான் தேசத்தில் நிகழும் பெரும் விபத்தைக் குறித்த தந்திச் சமாசாரங்களை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்திற் பிரசுரித்திருக்கின்றோம். கிழக்குப் பக்கத்திலே சமானமின்றிச் சிறந்து விளங்கும் ஜப்பான் ராச்சியம் தன்னிடமுள்ள எரிமலைகள் காரணமாக இடையிடையே சங்கடமுறுவது சகசம் ஆனாலும் இந்த முறை அதற்கு நேர்ந்திருக்கும் ஆபத்து மிகப் பயங்கரமானதென்பது, சென்ற சனிக்கிழமை தொடக்கமாக அங்கிருந்து இலங்கைக்கு வருந் தந்திச் சமாசாரங்கள் வாயிலாக விளங்கக்கிடக்கின்றது. இப்பெருவிபத்து ஜப்பானுடைய செல்வத்தையும் படை வலிமையையும் குறைத்துவிடவுங்கூடுமோவெனப் பயப்படவேண்டியிருக்கின்றது. விசூவியாமா வென்னும் அக்கினி பர்வதினின்றான அக்கினிவேகத்தால் பெரும் பூகம்பம் நிகழவே ஜப்பான் தேசத்தின் ராசதானியாகிய தொக்கியோ நகரமும் ஜப்பான் கடற்படை ஸ்தானமாகிய யொக்கமாமாத் துறைமுகப் பட்டினமும், பலகட்டடங்கள் வீழ்ந்து தகர்ந்துவிட அழியலாயின. இரு பட்டினங்களும் தீக்கு இரையாயினவென்றால் இவற்றின் நிலைமை எப்படியிருக்குமென்பதைக் கேட்கவும் வேண்டுமோ. இவைமாத்திரமன்றி லட்சக்கணக்கான சனங்கள் பரிதாபமான மரணத்தை யடைந்தனர். எஞ்சியவர்களும் இருக்க வீடும் உண்ண உணவுமின்றித் திகிலுடன் ஒதுக்கிடந் தேடித் திரிகின்றனர். ஆயிரக்கணக்கானோர் தங்கள் அரிய உயிரைக் காக்கக் கருதி நிலத்தை விட்டு நீரிற் சென்று கப்பல்களில் வசிக்கின்றார்கள். புகைரதப் பாதைகளும் ஸ்தானங்களும் பாலங்களும் மலைவழிகளும் சிதைந்து போனமையினால் நூறு மைல் கொண்ட தூரத்திற்குப் போக்குவரவு அசாத்தியமாகவிருக்கின்றது. தந்திக்கம்பிகளும் பிறவும் அழிந்து போனமையினால் மற்று மிடங்களுடன் பேச்சு வார்த்தை செய்துகொள்ளுதலும் முடியாமலிருக்கின்றது. பெரும் புயலும் வெள்ளப்பிரவாகமும் அதிகரித்துப் பல பட்டினங்களை நீருள் முழுகச் செய்துவிட்டன. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களுள் அப்பு தேயு வாயு என்னும் மூன்று பூதங்களுஞ் சேர்ந்து ஒரு நாட்டை அழிக்கத் தொடங்கினால் அந்த நாடு மீட்சியடையுமென எங்ஙனங் காத்திருக்கலாம்! யப்பானிய கப்பற்படையின் கதி எவ்வாறாயிற்றோவென்பது தெரியவில்லை. தந்தியில்லாக் கம்பி வாயிலாக கப்பற் படையோடு பேசியபோது எவ்வகையான பதிலுங் கிடைக்கவில்லையாம். அந்நிய தேசத்தாரும் தங்கள் கப்பல்கள் மார்க்கமாக உணவுப் பொருட்களையும் மற்றும் பொருட்களையும் ஏற்றிச் சென்று ஜப்பானில் இறக்கிக்கொள்ள முடியாத நிலைமையிலிருக்கின்றார்களாம். இன்னும் சங்கதிகள் எத்துணை மோசமுள்ளன வென்பதை உள்ளபடி அறிந்துகொள்ள முடியவில்லையாம். ருசியரை அடக்கி, மேலைத்தேச தத்துவ ராச்சியங்களையும் அச்சுறுத்தி அதிக வலிமையோடு விளங்கிய ஜப்பான் நாட்டிற்கு இக்கதி வருதல் ஈசன் செயலன்றி வேறொன்றுமன்று. "அவனையின்றி ஓர் அணுவும் அசையாது".

## உலகம் பலவிதம்.

"கலியாணமான பின் நீ எனது மகளல்ல. உனது கணவனின் பெற்றோர்களுக்கு நீ கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். மணவினை முடிந்த பின்னர் உனது கணவனே உனது எஜமான். உனது மாமியாருடன் எப்பொழுதும் அன்பாக நடந்துகொள்ள வேண்டும். எவ்வித சச்சரவுமின்றி அவர்களிடத்தில் மனமொத்துப் போகவேண்டும். பொறாமை என்பதே கூடாது. உனது புருஷனுக்கு உன்மீதுள்ள அன்பை இப்பொறாமை அழித்துவிடும். உனது புருஷன் ஏதாவது தவறான காரியத்தைச் செய்துவிட்டாலும் நீ சிறிதும் கோபப்படாது பொறுமையுடனிருக்கவேண்டும். குறி சொல்பவரிடம் குறி கேட்காதே. அதிகம் பேசுதல் கூடாது. அண்டை வீட்டாரைப்பற்றியும் பேசலாகாது. ஒரு பொழுதும்பொய் பேசலாகாது. உனது புருஷன் வீட்டார் முன்னிலையில் உனது பெற்றோரின் அந்தஸ்தைப் பற்றியாவது செல்வத்தைப் பற்றியாவது புகழ்ந்து பேசாதே. குடும்ப விஷயங்களில் மிகச் சிக்கனமாயிருப்பதோடு குடும்பக் காரியங்களைச் சரிவர நிர்வகிக்கவேண்டும். நீ இளவயதினளாய் இருந்தபோதிலும், வயதில் முதிர்ந்தவர்களுடனேயே அதிகமாகப் பழகவேண்டும். எப்பொழுதும் சுத்தமான, சாதாரண உடைகளையே தரிக்கவேண்டும்." என்னும் இவைகளே ஜப்பான் தேசத்துத் தாய்மார் தம் புதல்வியருக்கு விவாககாலத்திற் சொல்லும் புத்தியென "லக்ஷுமி" என்னும் பத்திரிகை கூறுகின்றது. இவை சிறந்த புத்தி யென்பதற்குச் சிறிதேனும் ஆசங்கையில்லை. நமது பூர்வ இந்தியதாய்மார் இவைபோன்ற சிறந்த புத்திகளைத் தம் புதல்வியருக்குங் கூறிவந்தனரென யாம் பல ஏதுக்களால் அறியக்கிடக்கின்றது. ஆனால் தாய் புத்தி சொன்னால் மகள் கேட்க மறுத்திடும் நவநாகரிககாலத்தில் நந்தாயர் இவ்வாறான புத்திகள் சொல்வதை யொழித்தனர். அவர்கள் சொன்னாலும் மக்கள் அப்புத்திகளைக் கேட்டு ஒழுகுவதற்குப் பதிலாகத் தாமே தாய்மாருக்குப் புத்தி போதிக்கப் புறப்பட்டுக் கொண்டனர். இக்காலத்து அன்னையர் தம் புத்திரிகட்குச் சொல்லும் புத்திகள் இப்படிப்பட்டவையல்ல. அவை விபரீத புத்தியாகும்.

* * *

'மகளே, கலியாணமான பின்பே நீ எங்கள் மேல் அதிக பாசம் வைத்து நடத்தல் வேண்டும்; உனக்கும் உன்கிளைக்கும் நாளும் உண்டியும் வாழ்வும் அங்கேயாய், மனக்கருத்து இங்கேயாய் இருக்க வேண்டும்; உனது மாமன் மாமியை உனக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் வண்ணம் நீ உன் நாயகனுக்குத் தலையணைமந்திரம் உபதேசித்தல்வேண்டும்; மணவினை முடிந்தபின்னே நீயே உனது கணவனுக்கு எஜமாட்டி; உனது மாமியாருடன் எப்பொழுதும

கிரமமாகப் புறணிகூறிச் சண்டையிட்டுக் கொள்ளவேண்டும்; பொறுமை யென்னும் குணத்தைப் பொன்போலப் போற்று; பொறுமை யுடையவளாக நீ இருந்தாலே உன் கணவனை நீ வசீகாஞ்செய்யமுடியும்; உனது புருஷன் தவறு செய்யாவிடினும் நீ அவனுடன் பிணங்குவதை மறந்து விடாதே; குறி சொல்லும்படி தெருவழியே செல்லும் குறத்தியரை வழிபார்த்திருந்து உன் வீட்டிற்கு அழைத்து ஆருடங் கேட்டு உள்ள அரிசி முழுவதையும் அள்ளி அவளுக்குக் கொடு; எந்நேரமும் எவரையேனும் வைதபடியே இரு; அண்டைவீட்டாருடனே சண்டை யிட்டுக் கொள்வதற்குக் கொடிக்கட்டு; உன் பிறந்த வீட்டாரின் கீர்த்திப் பிரதாபங்களை நீ புகுந்தவீட்டார் முன்னிலையில் எந்நேரமும் புழுகிக்கொண்டே இரு; குடும்ப விஷயமான செலவில் நாளைக்கென்று ஒன்றையும் வைக்காதே; அகப்பட்டதை அன்றன்றேசெலவுசெய்துவிடு; ஏதும் எஞ்சி யிருந்தால் இரகசியமாக எங்கள் வீட்டிற்கு அனுப்பி வை; குடும்ப காரியம் எப்படிப்போனாலும் நீ உன் சுகத்தை மாத்திரம் பார்த்துக்கொள்; நீ முதியவளாய் வந்தாலும் முதியோர்களுடன் சகவாசஞ் செய்தலை யொழித்து நவ நாகரீகம் படைத்த சிறுக்கியருடன் சிநேகஞ் செய்; வீட்டிலிருக்குங் காலங்களிலும் விலையுயர்ந்த பீதாம்பரங்களையே தரித்துக்கொள்; அவைகள் அழுக்கோடு கூடி இருந்தாலுங் காரியமில்லை; கெட்டாலுஞ் செட்டி கிழிந்தாலும்பட்டு என்பதல்லவா பழமொழி. பட்டுங் கெட்டும் எந்நேரமும் பட்டுக் கட்டிக்கொண்டாலே மதிப்புண்டு" என்னும் இவைபோன்ற நேர் விரோதமான புத்திகளே, இக்காலத்து அன்னையர் தம் புதல்வியருக்குப் போதிப்பனவாம். எனிப்படி யென்று கேட்டால் என் செய்யலாம் காலம் கலி முற்றிய காலமாகும்.

* * *

(ஒரு பத்திரிகாபிமானி எழுதி உதவியது.)

ஒரு நாள் நான் கம்பனையிலிருந்து கடுகண்ணாவைக்குப்போவதற்குக்கம்பளைப்புகைரத ஸ்தானத்தை யடைந்து அங்கு "டிக்கற்" கொடுக்கும் உத்தியோகத்தரிடம் ஒரு ஐம்பது சதத்தைக் கொடுத்து கடுகண்ணாவைக்கு மூன்றும் வகுப்பிற்கு ஒரு டிக்கற் கொடுக்கும்படி கேட்டேன். உடனே அவர் ஒரு டிக்கற்றைக் கொடுத்தார். கம்பளையிலிருந்து கடுகண்ணாவைக்கு டிக்கற் கிரயம் நாற்பத்தேழு சதமாகையால் மிகுதியாயுள்ள மூன்று சதத்தைக் கொடுக்கும்படி அவரைக் கேட்டேன். உடனே அவர் சீற்றங்கொண்டு எனது கையிலிருந்த டிக்கற்றைப் பிடுங்கி அடுத்துக்கொண்டு ஐம்பது சதத்தை எடுத்து வீசி, "நாற்பத்தேழு சதங்கொண்டுவா, டிக்கற் கொடுக்க" என்றார். இதற்கிடையில் புகைரதம் வருவதற்கு நேரமாயிற்று. திரும்ப, தமியேன், பணிவுடன் அந்த அதிபரிடம் ஐம்பதுசதத்தைக் கொடுத்து "மூன்றுசதம் வேண்டாம், டிக்கற்றைக் கொடுங்கள்" என்று கேட்டேன். அவர் திரும்பவும் காசை எடுத்து வீசி "நாற்பத்தேழு சதங் கொண்டுவா" என்று சினந்து கூறினார். தமியேன் பக்கத்திலிருந்த ஒரு வெற்றிலைக் கடைக்கார (சிங்களவ) ரிடம் அதை மாற்றிக் கொடுக்கும்படி கேட்க, அவர்களும் தங்களிடம் ஏதும் இல்லைக்குப் பெற்றுற்றுன் மாற்றிக் கொடுப்போம்" என்றனர். நான் கூ சதத்திற்குச் சுருட்டுக்கொடுக்கும்படிசொல்ல, உடனே மாற்றிக்கொடுத்தார்கள். ஆனால் அவர்கள்கொடுத்த பத்துச்சதங்களுள் இரண்டு தேய்ந்து ஆவார முடையனவாயிருந்தமையால் அவற்றை மாற்றிக் கொடுக்கும்படி கேட்க, உடனே அவர்கள் அந்த ஐம்பது சதத்தையுங் கொடுத்து, தங்கள் சுருட்டையும் காசையும் பெற்றுக்கொண்டனர். புகைரதம் சமீபத்தில் வந்த சத்தமுங் கேட்டுவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் யாதொன்றுஞ் செய்யமுடியாது. ஒரு யாழ்ப்பாணத்தவரிடஞ்சென்று நிகழ்ந்தவற்றைச் சொன்னேன். அவர் காசையும் மாற்றிக் கொடுத்து (யாழ்ப்பாணத்தவர்) என்ற அபிமானம்பற்றி இன்னுஞ் சில உதவிகளையுஞ் செய்தார். பின்னர் நான் ஓடோடியுஞ் சென்று நாற்பத்தேழு சதத்தைக் கொடுத்து டிக்கற் ஒன்றை எடுத்தேன். அப்பொழுது அவ்வுத்தியோகத்தரை நோக்கி "நீர் இவ்விதம் என்னைச் சிரமப்படச் செய்தீர், இது நீதியோ?" என்றேன். அவர் தன்னிடத்தில் ஒற்றைச் சதங்கள் இல்லையென்றார். "நான் உம்மிடத்தில் நூறு ஒற்றைச் சதங்களுக்கு மேல் இருப்பதைக்கண்டேன்" என்றேன். அவர் (you are very particular about the three cents, and that is why I asked you to bring fourty-seven cents) "நீ அந்த மூன்று சதத்திற்காக அதிக கவனஞ் செலுத்தியதால், நான் நாற்பத்தேழு சதம் கொண்டுவரும்படி சொன்னேன்" என்றார். அப்பொழுது நான் "(Take care of thy pence and the pounds will take care of themselves" "Little drops of water make a mighty ocean") "பலதுளி பெரு வெள்ளம்" என்ற முதுமொழியைச் சொல்லி "இப்பொழுது கடுகண்ணாவைக்குச் செல்லுதற்கு டிக்கெற் இரு சதமாயிருந்தால், அரசாங்கத்தார், ௫0 சதம் கொடுத்தவுடன், டிக்கெற் கொடுப்பார்களா? இல்லையே. அதுபோல் டிக்கெற் கிரயம் சாசதம் போக, மிகுதியாயுள்ள மூன்று சதத்தையும் நான் கேட்கவேண்டியது முறையாதலின் கேட்டேன். அன்றியும் மூன்று சதத்திற்கு உப்பு வாங்கினால் மூன்று நாளைக்குதவும். மூன்று சதமே யாயினும் சும்மா ஒருவரும் தரப்போகிறதில்லை. ஆயின் நீர் கோபித்தது நீதியல்ல. நீர் நீதியுள்ளவராயிருந்தால் முதல் நான் கொடுத்த ஐம்பது சதத்தைக் கண்டவுடனேயே நாற்பத்தேழு சதங் கொண்டு வரும்படி சொல்லியிருப்பீர். அங்ஙனஞ் செய்யாது ஐம்பது சதத்தை வாங்கிக் கொண்டு டிக்கெற்றைக் கொடுத்துவிட்டு மிகுதிக்காசைக் கேட்டவுடன் டிக்கெற்றைப் பிடுங்கிக்கொண்டு சீற்றங்கொள்வது சரியல்ல. அன்றியும் நீர் ஒரு (Relieving Booking Clerk) ஆகவிருந்தும் ஒரு சிங்கள சாதியினராதலினாலும் நான் ஒரு உயர்ந்த உத்தியோகத்த னல்லனாதலினாலும் காற்சட்டை போட்டுக்கொள்ளாது வேட்டியுடுத்துச் சந்தனப்பொட்டு அணிந்திருந்தமையாலும் இவ்விதஞ் செய்தீர்" என்று கூறிவிட்டு, எனக்கு உதவிசெய்த யாழ்ப்பாணத்தவருக்கு வந்தனம் அளித்துப் புகைரதத்திலேறி நான் செல்லவேண்டிய இடத்திற்குச் சென்றேன்."

## சமாசாரம்.

காலநிலை:—மழைக்கோலங் காணப்படுகின்றது. விரைவில் மழை பெய்யுமெனக் காத்திருக்கின்றோம்.

பரிதாபமான மரணம்:—சென்ற வியாழக்கிழமை ஒரு புகைரதத் தொடர் கொச்சிக்கடை ஸ்தானத்திற்கணித்தாயுள்ள மகாதுபாப் பாலத்திற்கு மேலாகச் செல்லும்போது, யந்திரத்தில் இறங்கிட்டுக்கொண்டு நின்ற மனுஷனுடைய தொப்பியைக் காற்றெடுத்துப்போக, தொப்பி எங்கே விழுந்ததிடக்கின்றதென்று பார்க்கும்படி தலையை நீட்ட தலை பாலத்தின் இரும்புச் சட்டத்தில் மோதிச் சிதறுண்டு போயது. அந்த மனுஷன் சிலமணித்தியாலங்கள் செல்ல வைத்தியசாலையில் இறந்தான்.

"சால்வையை எடு":—சென்ற திங்கட் கிழமை கொழும்புப் பொலிஸ்கோட்டில் ஒரு சிங்கள வாலிபன் கூட்டில் நின்று சாட்சி சொல்லும்போது நீதிபதிக்கு அவன் தன்னுடம்பில் அங்கவஸ்திரமணிந்திருந்தமை பிடிக்காமையினால் அதனை எடுக்கும்படி தயனுக்குச் சொல்ல, அவன் சால்வையை யெடுப்பதற்குப் பின்னிட, நீதிபதி சீற்றங்கொண்டு அவனுடைய சால்வையை எடுத்துவிடும்படி முதலியாருக்குக் கட்டளை செப்ப முதலியார் உடனே சால்வையைப் பிடுங்கிவிட்டார். சிங்கள வாலிபன் பாதி நிர்வாணமாக அதன்பின்னர் நின்று சாட்சி சொன்னான். என்ன பெருந்தன்மை!

மோட்டர்ரத விபத்து:—சென்ற வெள்ளிக் கிழமை இரவு உவாற்கின்ஸன் என்னும் ஐரோப்பியர் மணஞ்செய்து பத்துநாட்கள் மாத்திரஞ் சென்ற தமது மனையாருடனும், றபேட்ஸ் என்னும் இன்னொரு ஐரோப்பியருடனும் தமது மோட்டர் ரதத்தைச் செலுத்திக்கொண்டு கொழும்புப் பட்டின வீதிவழியே வேகமாகச் செல்லும் போது எதிரே ஒரு மோட்டர் துவிசக்கரம் வருதலும் அதனைவிட தமது மோட்டர்வண்டி மோதுண்ணுதபடி ரதத்தை ஒருபுறத்தே திருப்ப அது தலதுண்டு தெருவருகிலுள்ள பள்ளத்தில் வீழ்ந்து சுவரில் மோதிப் பழுதுற்று அதன்கணிருந்த மூவருக்கும் பெருங்காயங்களை விளைத்தது. மணமக்கள் வைத்தியசாலையில் ஆபத்தான நிலையிலிருக்கின்றனர். மோட்டர்சைக்கிளில் வந்து மோதுண்ட பிறவுன் என்பவரும் காயமடைந்து வைத்தியசாலையிலேயேயிருக்கின்றார்.

பறங்கிப் பெண் தற்கொலை செய்தாள்:—கொழும்பில் 22 வயசு வரையிலுள்ள ஒரு பறங்கிய மாது ஏதோ வைராக்கியங் காரணமாக தன் படுக்கையறையை உட்பக்கத்தே தின்று பூட்டிவிட்டுத் தன் உடையில் மண்ணெண்ணெயை ஊற்றித் தனக்குத் தானே கொள்ளி வைத்தாள். எரியும்போது வீட்டிலுள்ளோர் அறிந்து ஒருவாறு அறைபுட் புகுந்து தீயை அவித்துவிட்டனர். அவித்தபொழுது சில மணித்தியாலஞ் செல்ல அவள் இறந்தாள். அம்மாது மரணவஸ்தையிற் கிடக்கும்போது, தான் வேணுமென்றே அப்படிச் செய்ததாகவும், இப்படிச் சாகாவிட்டால் தான் வைத்தியகாரர் வைத்தியசாலையில் இருக்கவேண்டி யேற்படுமென்றுஞ் சொன்னாளாம். காரணம் யாதெனத் தெரியவில்லையாம். வயசை நோக்குமிடத்தில் காதல் விஷயமாக யாதும் பிரதிகூலம் ஏற்பட்டிருக்கக்கூடுமோ வென்றுஞ் சந்தேகம் பிறக்கின்றது.

## தேகவியோகம்.

திரிகோணமலை வாசரும் கல்வி அறிவு ஒழுக்கம் பிரபுத்துவம் முதலியவற்றாற் சிறந்து விளங்கியவரும் ஆகிய பிரமஸ்ரீ கா. கு. சபாரத்தினக் குருக்களவர்கள் இந்த ஆவணிமீ 13உ புதன் கிழமை இரவு சிவபதப்பிராப்தியாயினர். இவர் தமது குலதெய்வமாகிய விஸ்ணுவன்றிக் கந்தசுவாமி ஆலயத்தில் குறித்த புதன்கிழமையாகிய நாலாவது உற்சவதினத்தன்று இரவு வழக்கம்போல் நித்தியபூசையை நிறைவேற்றித் தமது வீட்டிற்கு வந்து போசனஞ்செய்து தமது புத்திரர்களையும் சுற்றத்தவர்களையும் அழைத்துத்தமது மரணசம்கதியை அறிவித்து ஒரு விதமான அவஸ்தையுமின்றி உடலை நீத்தார். இவர் தமது சீவியகாலத்தில் தேவபக்தி நல்லொழுக்கம் ஆன்மஇரக்கம் முதலிய நற்குணங்களமைந்து எவராலும் பெருமை பாராட்டப்பட்டிருந்தனர். அதுபோலவே இவரது தேகவியோகமும் எவருக்கும் அதிசயிக்கக் கூடியதாய் அமைந்தது இவரை இழந்து துன்புறும் புத்திரமித்திராதியருடன், நாமும் அநுதாபப்படுகிறோம். —கடிதம்

## யப்பானிற் பூகம்பம்.

### இரு பட்டினங்கள் எரிகின்றன.

ஜப்பானிற் சில தினங்கட்குமுன் பெரும் பூகம்பம் நிகழ்ந்தமையினால் யொக்கொமா, தொக்கியோ என்னும் இரு பட்டினங்களும் பெருந்தீப்பிடித்து எரிகின்றன. எண்ணிறந்த கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன. வியூஜியாமா என்னும் அக்கினிமலைக்கணித்தாகப் பூகம்பம் மிக்க அதிர்ச்சியாகவிருந்தது. பட்டினங்கள் எரிவதனால் அநேக சனங்கள் கடலிலே கப்பலில் வசிக்கின்றனர். புகைரத ஸ்தானங்களும் பாதைகளும் அழிந்துபோயின. மாண்ட சனங்களின் தொகை தெரியவில்லையாம். தீச்சுவாலை அயலிலுள்ள பட்டினங்களிலும் தாவுகின்றனவாம்.

### பிந்திய சமாசாரம்.

செப்டெம்பர்மீ 2உ.

யொக்கொமாவிலும் தொக்கியோவிலும் 100000 பேர் வரையில் மாண்டனர். ஜப்பானிய மந்திரி அருந்தப்புத் தப்பினர். துறைமுகத்திலுள்ள கட்டடங்கள் அழிந்துபோயின. ஜப்பானிய கடற்படையும் அழிந்துபோயினதோ என்னும் சந்தேகம் ஏற்படுகின்றது. ஏனென்றால் தந்தியில்லாக் கம்பி மார்க்கமாகப் பேசியபோது பதிலொன்றையுங் காணவில்லையாம். யப்பானிலுள்ள பெரிய புகைரதப் பாதைச் சுரங்கமொன்று இடிந்து வீழ்ந்துவிட்டது. இதனுள் அகப்பட்ட 600 பேர் மாண்டனர். கிழக்குக் கரையிலே பூகம்பம் மிகக் கடுமையாக விருந்தது. புகைரதப் பாதைப் பாலங்கள் பல அழிந்துபோயினமையினால் புகைரதப் போக்குவரவு தடைபட்டது. இப்பகுதியில் இறந்தவர்கள் தொகையைக் கணக்கிட முடியவில்லை. கைத்தொழில் நடந்து வந்த இடங்கள் பல சாம்பராயின. யொக்கொமாவில்மாத்திரம் 10000 பேர் வரையில் மாண்டனர். தொக்கியோவில் எங்கு பார்த்தாலும் பிரேதங்கள் காணப்படுகின்றன. அரசமாளிகை தீப்பற்றி யெரிகின்றது. தொக்கியோவிலுள்ள அநேக பெரிய கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன. மத்திய ஜப்பானுக்கும் மற்றுமிடங்களுக்கு மிடையேயுள்ள போக்குவரவுச் சம்பந்தங்களும் பேச்சு வார்த்தைச் சம்பந்தங்களும் அழிந்துபோயின. யொக்கொமாவில் உயிரோடிருக்குஞ்சனங்கள் தாமும் தண்ணீரும் உணவுமின்றித் தவிக்கின்றார்கள். வியூஜி மலைக்கணித்தாயுள்ள அநேக சிறிய பட்டினங்கள் அழியலாயின. யொக்கொமா நகரத்தில் மாத்திரம் 100000 பேர் வரையில் மாண்டனரெனப் பிந்தி வந்த தந்திச் சமாசாரத்தால் அறியக் கிடக்கின்றது.

செப்டெம்பர்மீ 3உ.

அரசமாளிகையில் ஒருபாகந்தான் அழிந்துபோயதென்றும், எஞ்சிய பாகம் பழுதின்றியிருக்கின்றதென்றும், தெரிவிக்கப்படுகிறது. எனோசிமாவென்னுந் தீவும், காமகுரு என்னுமிடமும் கடலுள் அமிழ்ந்தின. ஜப்பானிய சக்கரவர்த்தி நிக்கோ என்னுமிடத்தில் வசிக்கின்றார். இங்கே யாதும் அபாயம் இல்லையாம். தொக்கியோவிலுள்ள அந்நிய நாட்டுப் பிரதிநிதிகளைப் பற்றிய சமாசாரம் ஒன்றுந் தெரியவில்லை. யொக்கொமாவிலுள்ள வங்கியும் பெரிய விடுதிச்சாலையும் அழிந்துபோயின. ஜப்பானிலுள்ள கடைகளெல்லாம் பூட்டப்பட்டன. கப்பற்படைக்குரிய கட்டடங்கள் பதனமாக விருக்கின்றன. தொக்கியோவில் யுத்தகாலச் சட்டம் (மாஷல்லா) அநுசரிக்கப்படுகின்றது. ஆங்கிலர் அமரிக்கர் முதலிய அந்நிய சாதியினருக்குரிய கப்பல்கள் விபத்தில் அகப்பட்டவர்களுக்கு உதவிசெய்யும்படி பொருட்களை ஏற்றிக்கொண்டு செல்கின்றன. ஆனால் கரையில் இறக்குவது கஷ்டமாயிருக்கின்றது. துறைமுகங்களிலுள்ள வெளிச்ச வீடுகள் வீழ்ந்துவிட்டமையினால் இராக்காலத்திலே கப்பற் பிரயாணஞ் செய்வது முடியாமலிருக்கின்றது.

இதுவரையில் மாண்டவர்தொகை 150000. அந்நியநாட்டினர் 40 பேர் மாண்டார். தொக்கியோவிலுள்ள 15 பெரும்பிரிவுகளுள் 8 பிரிவுகள் அழிந்துபோயின. சாமிடாநதிமேலுள்ள வாராவதிகளெல்லாம் வெள்ளத்தில் அள்ளுண்டு போய்விட்டபடியால்: போக்குவரவு முடியாமலிருக்கின்றது. சிலராசதந்திரிகள் மாண்டனர்.

### அமரிக்கரின் பெருந்தன்மை.

கிழக்குச்சமுத்திரங்களில் நிற்கும் அமரிக்க யுத்தக்கப்பல்களெல்லாம்ஜப்பானுக்குச்சென்று பேராபத்தில் அகப்பட்ட ஜப்பானியருக்கு வேண்டிய உதவிகள் செய்தல் வேண்டுமென அமரிக்க அரசாங்கத்தார் கட்டளையிட்டிருக்கின்றனர்.

ஜப்பானிய கடற்படையரண் அழிந்துபோய்விட்டது. ஒருசர்வகலாசங்கம் அழிந்துபோய்விட்டது.


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

—0—

1892-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று வண்-கிழக்கில் அடைவுபிடிக்கும் பெ அ. சி. மு. அரு. அருணாசலஞ்செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

| நம். | மாத. | திக. | ரூபா | ஊர் | பெயர் | நகை விபரம். |
|---|---|---|---|---|---|---|
| | 1921ஆ | | | | | |
| 13 | மார்ஜ் | 25 | 9 | உடுவில் | கா. கந்தையா | பொன் சாதா மோதிரம் 1 |
| 324 | செப். | 5 | 6 | கந்தர்மடம் | க. கந்தையா | பொன் குயலைக் கடுக்கன் சோடி 1 |
| 330 | ,, | 12 | 30 | ஆனைப்பந்தியடி | மு. இரத்தினம் | பொன் கிள்ளட்டியல் 1 |
| 408 | ஒக்தோ | 17 | 25 | திருநெல்வேலி | அ. சொ. மு. | பொன் பட்டணக்காப்பு 1 |
| 491 | நவம். | 26 | 25 | நீராவியடி | வ. பொன்னு | பொன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 531 | டிசம். | 18 | 90 | சுண்டிக்குளி | க. ஆறுமுகம் | பொன் ஆடித்தன் மோதிரம் 1, ஒப்பின் மோதிரம் 1, கோட்டுமோதிரம்1, கல் அட்டியல்1, வெள்ளிப்பாதசரம் சோ.1. |
| 540 | ,, | 20 | 30 | கீரிமலை | ச. செல்லையா | பொன் கொண்டைக்கூர் 1, திருகுபூ 1 |
| 547 | ,, | 21 | 10 | வண்கிழக்கு | அ. தம்பிப்பிள்ளை | பொன் ஒப்பின் மோதிரம் 1 |
| | 1922ஆ | | | | | |
| 583 | ஜனவரி | 4 | 8 | வண்மேற்கு | சி. ஆறுமுகம் | பொன் கொண்டைப்பூ 1 |
| 600 | ,, | 8 | 12 | சோனகதெரு | ப. முகம்மது அப்துல்காதர் | பொன் சிகிலமோதிரம் 1 |
| 647 | ,, | 23 | 10 | பறங்கித்தெரு | சோ. மீ. ஞே. | பொன் கல் மோதிரம் 1 |
| 758 | மார்ஜ் | 4 | 130 | வண்மேற்கு | நா. வாலசுப்பிரமணியக் குருக்கள் | பொன் கெட்டிக்காப்பு சோடி 1 |
| 800 | ,, | 17 | 26 | சோனகதெரு | அ. சுல்த்தான்கண்டு | வெ. பாதசரம் சோடி 1, டை தண்டை சோடி 1 |
| 812 | ,, | 22 | 35 | ஆனைக்கோட்டை | வே. பொன்னையா | பொன் தாயித்து1, உருட்டு மோதி.8 |
| 822 | ,, | 25 | 22 | வண்கிழக்கு | செ. கந்தசாமி | பொன் சங்கிலி1, மயிர் யில் சோடி 2 |
| 836 | ,, | 20 | 8 | கொக்குவில்கிழக்கு | மா. அருளம்பலம் | பொன் கொண்டைப் பூ 1. |
| 867 | எப்பி. | 9 | 8 | தட்டாதெரு | கு. தம்பிமுத்து | பொன் கல் சிமிக்கி வாளி சோடி 1 |
| 902 | ,, | 29 | 60 | கோப்பாய் | சோ. சபாபதிஐயர் | பொன் பட்டணக்காப்பு சோடி 1 |
| 968 | மே | 7 | | புங்குடுதீவுமேற்கு | சு. முத்துக்குமாரு | பொன் சாட்டு அட்டியல் 1 |
| 1014 | ,, | 22 | 10 | சுன்னாகம் | நா. தம்பு | பொன் சிகில்மோதிரம் 1 |
| 1045 | ,, | 27 | 10 | கன்னாதிட்டி | கு. அலைச்சாமிப்பத்தர் | பொன் கல்வைத்த தோடு சோ.1 |
| 1083 | ஜூன் | 8 | 66 | கோப்பாய் | சோ. சபாபதிஐயர் | பொன் பட்டணக்காப்பு சோடி 1 |
| 1149 | ,, | 26 | 12 | நவாலி | ந. கந்தையா | பொன் தாயித்து 1, கொண்டைப்பூ 1 |
| 1173 | ஜூலை | 6 | 45 | மானிப்பாய் | சி. முத்துக்குமாரு | பொன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 1257 | ஆகஸ் | 11 | 40 | கோப்பாய் | பி. சந்தியாகு | பொன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 1275 | ,, | 15 | 25 | வண்மேற்கு | அ. ரெஞ்சநாதன் | பொன் கைச் சங்கிலி 1 |
| 1279 | ,, | 16 | 85 | புத்தூர்மேற்கு | அ. நமசிவாயம் | பொன் பீலிக்காப்புசோடி1, தாயித்து1 |

விற்பனவு:—ருதிரோற்காரி வருடம் புரட்டாதிமீ 6உ (22-9-23) சனிக்கிழமை முற்பகல் பத்துமணிதொடக்கம் எடுபட்ட நகை பிறகேலாக மிகுதி டை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(Mis. 381.)

அரு செல்லையா உடையார்,
லெர்லின்மென்தர்.

